දුරකථන ) 0112669192, 0112675011
தொலைபேசி ) 0112698507, 0112694033
Telephone ) 0112675449, 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
E-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXU/03/2024

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය ) 2024/09/18
திகதி )
Date )

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : **02 – 131 / 2024**

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - கண்டி
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - காலி
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்கள்

## தாதிச் சேவையில் தரம் I இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (இரண்டாவது தடவை)

1837/8 ஆம் இலக்கமுடையதும், 2013.11.19ம் திகதியுடையதுமான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக தாதி உத்தியோகத்தர்கள் தரம் I ற்கு நியமிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்குள் சித்தியடையவேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2024.11.24** ஆம் திகதி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்படும்.

**02** **தகைமைகள்**

- தாதி உத்தியோகத்தர் தரம் I ற்கு தரம் உயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.
- தரம் I ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்களில் 2010.11.01ம் திகதிக்கு தரம் I ல் 05 வருடங்கள் முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள் 3வது இவ் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுவர்.
- அதே போன்று தாதியர் உயர் கற்கைக் கல்லூரியில் (தேசிய தாதியர் கல்வி நிறுவனம்) 1½ வருட கால டிப்ளோமா பயிற்சி நெறியினை நிறைவு செய்துள்ள தரம் I (வைத்தியசாலைச் சேவை / தாதியர் கல்வி / பொதுச்சுகாதாரம்) பதவிகளில் உள்ள தாதி உத்தியோகத்தர்கள் இந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுவர்.ஏனைய அனைத்து தரம் 1 பதவிகளில் உள்ள தாதி உத்தியோகத்தர்கள் இவ் வினைத்தித்திறமைகாண் பரீட்சையில் சித்தி பெறுவது கட்டாயமாகும்.
- 2010.11.01ம் திகதியின் பின்னர் தரம் I ற்கு தர உயர்வு பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும் இவ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

**கவனிக்கவும் : 2024.10.16 ம் திகதி தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களின் விண்ணப்ப படிவங்களை மாத்திரம் சிபாரிசு செய்து எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். (தரம் I ற்கு நியமிக்கப்பட்ட நியமனக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டியது கட்டாயமாகும்)**

## 03 விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பணிப்பாளர் (பரீட்சைகள்) அவர்களிற்கு **2024.10.16** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் **"தாதிச் சேவையில் தரம் I இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (இரண்டாவது தடவை)"** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினாலும் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" × 4") கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். **விண்ணப்ப முடிவு திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

கவனிக்கவும் : **விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். மத்திய அரசின் கீழ் சேவைபுரிபவர்கள் முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 10 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறு இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.**

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25.00 எனும் விகிதம் பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்தல் வேண்டும்.

4.2 இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றுதலோ, மீள வழங்கப்படுதலோ மேற்கொள்ளப்பட மாட்டாது.

## 05 பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

5.2 ஆண், பெண் பரீட்சார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்கள அடையாள அட்டை
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

## 06 பரீட்சைத்திட்டம்

இவ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது "பொது முகாமைத்துவம்" மற்றும் "பொது தாதியியல்" என்னும் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளுக்கான நேரம் - 03 மணித்தியாலங்கள். ஒவ்வொரு வினாத்தாளின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தது 40 புள்ளிகளினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு தடவையில் அல்லது பல்வேறு தடவைகளில் பரீட்சைக்கு தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக் கொள்ள முடியும். உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தடவையில் உரிய அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். (தாதி உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் அதாவது தாதி மாணவ/மாணவியாக பயிற்சி பெறுவதன் பொருட்டு விண்ணப்பித்த மொழியில் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.)

| EXU |
|---|
| Nursing I |

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக பாவனையின் பொருட்டு

**தாதிச் சேவையில் தரம் I இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (இரண்டாவது தடவை)**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ..........................................................................

..........................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்):

(iii) முதல் எழுத்துடன் பெயர் : (தமிழில்): ..........................................................................

..........................................................................

(iv) முதல் எழுத்துடன் பெயர் : (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ) (i) தாதி உத்தியோகத்தர் தரம் I ற்கு பதவியுயர்த்தப்பட்ட கடித இலக்கமும், திகதியும் :

கடித இலக்கம் ..........................................

திகதி: ..........................................

**(தரம் I ற்கு பதவியுயர்த்தப்பட்ட கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்குக)**

(ii) 2010.11.01 ம் திகதியன்று தரம் I இல் தொடர்ச்சியான சேவைக்காலம் : ..........................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ..........................................

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

(v) தேசிய அடையாள அட்டை இல :

(vi) மின்னஞ்சல் முகவரி : ..........................................

**02.** தாங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

பொது முகாமைத்துவம் ☐ பொது தாதியியல் ☐

**03.** (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( தமிழில்) ..........................................

(ஆ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது. மத்திய அரசாங்கத்தினால் ☐

மாகாண சபையினால் ☐

(இ) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விருப்பத்திற்குரிய மாவட்டம் :

1).......................... 2).......................... 3)..........................

**(இம் மாவட்டங்களில் பரீட்சை நிலையம் அமையப் பெறாதவிடத்து அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்)**

(ஈ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறை 01 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..........................................

(உ) (i) தபால் முகவரி (தமிழில்) ..........................................

..........................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................

..........................................

**04.** பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..........................................

**07** பரீட்சைப் பாடத்திட்டம்

7.1 பொது முகாமைத்துவம்

- நோயாளர் பராமரிப்புத் திட்டம்
- பணியாளர் கண்காணிப்பும் மேற்பார்வையும்
- பொறுப்புக் கூறலுடன் வேலைகளினை பகிர்ந்தளித்தல் (Deligation)
- தலைமைத்துவம் (Leadership)
- மனித வள முகாமைத்துவம்

7.2 பொது தாதியியல்

- ஆரம்ப சுகாதார கவனிப்பு (17 விடயங்கள் தொடர்பானவை)
- நோய்த் தடுப்பும் சுகாதார மேம்பாடும்
- கல்வியியல் கோட்பாடுகள்
- தாதித்தொழில் ஆராய்ச்சிக் கோட்பாடுகள்
- நோயாளர் விடுதி பரிபாலித்தல் /பரிபாலனம்
- தொடர்பாடல்
- குழு எண்ணக்கரு
- பணியணி அபிவிருத்தி

எல்லா வினாத்தாள்களும் கட்டுரை வடிவிலான வினாக்கள் 08 ஐ கொண்டுள்ளன. அதில் விரும்பிய (05) ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**08** **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை,புத்தகங்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**09** தயவு செய்து இச்சுற்று நிருபத்தினை உங்களது வைத்தியசாலையில்/ நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த தகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளாம்.

**(www.health.gov.lk ⟶ Staff Access ⟶ Administration ⟶ Examination ⟶ Circular)**

**குறிப்பு : இவ்வறிவித்தல் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.**

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா? ..............................................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ..............................

| முத்திரைக் கூண்டு |
| --- |

06. விண்ணப்பதாரியின் சான்றிதழ்

அ) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், முதன் முறை என்பதால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத்தேவையில்லை என்பதனாலும் /முதன் முறையல்ல என்பதால் ரூ............. பெறுமதியான முத்திரை ஒட்டியுள்ளேன் எனவும். இவ் விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரை வலுவற்றதாக செய்வதற்கு முன்னர் பயன்படுத்தப்படாத முத்திரை என்பதனையும் பிரகடனம் செய்கின்றேன்.

ஆ) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ................................ ..............................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. விஷேட தர தாதி உத்தியோகத்தரின் சிபாரிசு

திரு / திருமதி / செல்வி ...................................................................... தரம் I தாதி உத்தியோகத்தராக எனது பிரிவில் கடமை புரிகின்றாரெனவும், இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை இவர் பெற்றுள்ளதாகவும். உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: .............................. ..............................................

விஷேட தர தாதி உத்தியோகத்தரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

08. சுயவிபரக் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் 1 ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையின் இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................. ..............................................

பெயர், கையொப்பமும், திகதியும்.

09. நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திரு/திருமதி/செல்வி* .............................................. என்பவர்................................. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் இவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா ........... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவை எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................. ..............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

10. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்

திரு / திருமதி / செல்வி ................................................... என்பவர் I ஆம் தரத்தினைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தராக எனது விசேட இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................................... ..............................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /
விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

* தேவையற்றவற்றினைக் கீறிவிடவும்.